BILLS SECTION

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

---

**Saturday, the 25th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Town-halls (construction)*

* 894 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரங்களில் டவுன்ஹால் கட்ட மத்திய அல்லது ராஜ்ய சர்க்கார் மானியம் அல்லது கடன் பணம் எவ்வளவு கொடுக்கிறார்கள் ?

(இ) இல்லையென்றால், டவுன்ஹால் இல்லாத நகரங்களில் டவுன்ஹால் கட்ட இனிமேலாவது மானியமாக பணம் கொடுக்கப்படுமா ?

(உ) எவ்வளவுதொகை கொடுக்கப்படும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) (இ) & உ) : The Central Government have not sanctioned any grant or loan for the purpose of construction of Town-halls by the municipalities. No grants have been sanctioned to the municipalities for the purpose by the State Government so far. Applications for loins for this purpose from the municipalities will however be considered by the Government on their merits.

SRI V. K. KOTHANDARAMAN : நகரசபைகள் இருக்கக்கூடிய பல நகரங்களில் டவுன் ஹால் இல்லாத காரணத்தினால், பல சந்தர்ப்பத்தில் சில பிரமுகர்கள் வரக்கூடிய நேரத்தில் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? டவுன் ஹால் இல்லாத ஒவ்வொரு நகரத்திலும் டவுன் ஹால் கட்டுவதற்கு அந்த அந்த நகரசபைகளுக்கு சப்ஸிடி பாதி, லோன் பாதி என்றோ, அல்லது முழுக்க முழுக்க லோனாகவோ பணம் கொடுத்துக் கட்டுவதற்கு அரசாங்கம் உதவி செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நான் பதில் சொல்லும்போது அந்த அந்த முனிஸிபாலிட்டியின் நிதி நிலைமையை அனுசரித்து, அவ்விஷயம் பரிசீலனை செய்யப்பட்டு கட்டப்படும் என்று தெரிவிக்கிறேன்.

[25th March 1961

SRI A. A. RASHEED : May I know whether the Government have paid any amount towards the renovation of V.P. Hall in the Madras City?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Let the hon. Member put a separate question.

**SRI N. MARUDACHALAM :** *கோவை நகரத்து டவுன் ஹால் பழைய காலத்தில் கட்டப்பட்டதனால், அதை இடித்துவிட்டு புதியதாகக் கட்டவேண்டுமென்ற கோரிக்கை அந்த நகரசபையிலிருந்து வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதற்கான தொகையை சப்ஸிடியாகவோ, கடனாகவோ கொடுத்து அதைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?*

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON :** *அவ்வாறு கோரிக்கை வந்ததாகத் தகவல் இல்லை. இப்போதுள்ள நிலைமையில் அந்த அந்த நகரசபையின் நிதி நிலைமையை அனுசரித்துத் தான் இவ்விஷயம் கவனிக்கப்படும் என்று கூறினேன்.*

**SRI V. K. KOTHANDARAMAN :** *டவுன் ஹால் இல்லாத நகரங்களிலே உடனடியாக டவுன் ஹால் கட்டப்படாவிட்டாலும் நகரத்திற்கு சில பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள் வருகிற சந்தர்ப்பங்களில் ஒரு கூட்டமோ, டீ பார்டியோ நடக்கவேண்டியதாக இருந்தால் அந்நகரத்திலுள்ள பாடசாலைக் கட்டிடங்களிலாவது நடத்திக்கொள்வதற்கு அனுமதி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?*

DEPUTY SPEAKER : How does this question arise? I disallow it.

*Kurichi Municipality (revenue and expenditure)*

* 896 *Q.*—**SRI N. MARUDACHALAM :** *கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

கோவை ஜில்லாவில் குறிச்சி மேஜர் பஞ்சாயத்தாயிருந்ததை 1958-ம் வருஷம் அக்டோபர் மீ 1-ல் முனிசிபாலிட்டி என்று விளம்பரம் செய்யப்பட்டபின், மேற்படி தேதியிலிருந்து 1960-ம் வருஷம் நவம்பர் மீ 1-ம் தேதி வரையில் அந்த முனிசிபாலிட்டிக்கு வருவாய் எவ்வளவு? செலவு எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The total receipts and expenditure of the defunct Kurichi Municipality for the period from 1st October 1958 to 1st October 1960 are Rs. 2,72,695 and Rs. 2,52,765 respectively.

**SRI N. MARUDACHALAM :** கோவை-குறிச்சி பஞ்சாயத்தை முனிஸிபாலிட்டியாகப் பிரகடனம் செய்த பிற்பாடு, ஸ்பெஷல் ஆபீசர் போட்டு நிர்வாகம் நடந்து சில காலத்திற்குள் மறுபடியும் பஞ்சாயத்தாக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெஷல் ஆபீசர் என்று இருந்த இடைக்காலத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு